SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் மாசி 25 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ரமலான் 8

மாநிலம் பயனுற!

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 9, 2025 ● வெளியூர்: 10-3-2025, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 233 ● 8 பக்கம் ● ரூ.6

## தொகுதி மறுவரையறை ஒரு கட்சி பிரச்னை இல்லை

# அனைத்து கட்சி எம்பிக்களையும் ஒருங்கிணைத்து முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்

### மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்



சென்னை, மார்ச் 9-

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடர்பாக திமுக எம்.பி.க்களுடன் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்தினார். அண்ணா அறிவாலயம் முரசொலி மாறன் வளாக கூட்டரங்கில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் திமுக எம்.பி.க்கள் கலந்து கொண்டனர். அதில் தொகுதி மறுவரையறை தொடர்பாக கூட்டு நடவடிக்கைக் குழுவில் பங்கேற்க தென் மாநில கட்சிகளின் தலைவர்களை நேரில் சென்று அழைக்க அமைச்சர்கள், எம்.பி.க்கள் கொண்ட குழு அமைப்பது பற்றி ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் 3 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 1:**

தமிழ்நாட்டின் மக்களவைத் தொகுதிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சிகளுக்கு துணை நின்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவோம்;

தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாப்பது மட்டுமின்றி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கின்ற ஜனநாயகப் போராளியாகத் திகழ்கின்ற தமிழ்நாடு முதல்அமைச்சரின் வழிகாட்டுதலில் இந்திய நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி.க்களின் குரல் ஓங்கி ஒலிக்கும் என உறுதியளிப்பதுடன், தமிழ்நாட்டிற்கான நிதிப் பகிர்வில் தொடர்ந்து பாரபட்சம் காட்டி வருவதுடன், தமிழ்நாடு பல துறைகளிலும் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள இருமொழிக் கொள்கைக்கு எதிரான இந்தித் திணிப்பு முயற்சியையும் மேற்கொண்டு தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் மத்திய பா.ஜ.க. அரசு, மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ளவிருக்கும் தொகுதி மறுசீரமைப்பிலும் தெளிவான பதிலைத் தராமல் குழப்பி வருகிறது.

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திய தமிழ்நாடு முதலிய தென்னிந்திய மாநிலங்களைப் பழி வாங்குகிற வகையில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சிக்கும் பா.ஜ.க.வின் சதித் திட்டத்தைத் தெளிவாக உணர்ந்து, இப்பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கும் முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அனைத்து முயற்சிகளுக்கும் முழுமையாகத் துணை நிற்பதுடன் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினைகளை முன்வைத்துப் போராடி, தமிழ்நாட்டிற்குரிய நாடாளுமன்ற தொகுதிகளில் ஒன்று கூட குறையாத வகையிலும், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்குரிய தொகுதிகளின் விகிதாசாரத்தைத் தக்க வைப்பதிலும் வெற்றியை ஈட்டுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 2:**

மறு சீரமைப்பினால் தொகுதிகளை இழக்கும் மற்ற மாநிலங்களையும் ஒருங்கிணைத்து களம் காண்போம்; தொகுதி மறுசீரமைப்பின் விளைவுகள் தமிழ்நாட்டின் நியாயமான உரிமைகளைப் பாதிக்கும் என்பதால் அந்த உரிமையைக் காக்கும் அறவழி முயற்சிகளில் தமிழ்நாட்டில் இதுவரை நடந்திராத வகையில், 50க்கும் மேற்பட்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் நியாயம் பெறுவதற்கான இயக்கத்தை முன்னெடுத்திருக்கும் முதல் அமைச்சருக்கு ஆதரவாக நின்று, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதால் மக்களவைத் தொகுதிகளை இழக்க நேரிடும் அபாயத்தில் உள்ள ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா, ஒடிசா, மேற்கு வங்கம், பஞ்சாப் என பாதிக்கப்படவிருக்கும் 7 மாநிலங்களைச் சார்ந்த கட்சிகளையும் ஒருங்கிணைத்துப் போராட்டக் களத்திற்கு அழைத்து வரும் பொறுப்பைக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து மேற்கொள்வர் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 3:**

தொகுதி மறு சீரமைப்பில் மாநில உரிமைகளை நிலைநாட்டும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து செயல்படுவோம். நாடாளுமன்ற நிதிநிலை அறிக்கையின் இரண்டாவது கட்டக் கூட்டத்தொடர் மார்ச் 10ஆம் நாள் தொடங்கவுள்ள நிலையில், டெல்லியில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், இந்தியா கூட்டணி உறுப்பினர்கள் மட்டுமின்றி ஜனநாயகத்தைக் காப்பதில் உறுதியாக உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து, கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்அமைச்சர் முன்னெடுத்துள்ள தொகுதி மறுசீரமைப்பில் மாநிலங்களுக்கான உரிமைகளை நிலைநாட்டும் வகையில் நாடாளுமன்றத்தில் இதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து பாதிப்படையவுள்ள மாநிலங்களுடைய தொகுதிகளின் எண்ணிக்கையையும் அதன் விகிதாசாரத்தையும் காப்பாற்றுவோம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தொகுதி மறுவரையறை என்பது தனிப்பட்ட ஒரு கட்சியின் பிரச்சினை இல்லை. தமிழ்நாட்டின் பிரச்சினை. பல மாநிலங்களின் பிரச்சினை. எனவே தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி எம்.பி.க்களையும், திமுக எம்.பி.க்கள் ஒருங்கிணைத்து, டெல்லியில் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். டெல்லியில் உடனடியாக தமிழ்நாடு எம்.பி.க்கள் கூட்டத்தை கூட்டி கருத்துக்களைப் பெற்று செயல்பட வேண்டும். தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் 7 மாநிலங்களில் உள்ள 29 கட்சிகளுக்கும் கடிதம் எழுதுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் தொகுதி மறுசீரமைப்பு கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பாக மற்ற மாநிலங்களுக்கு அமைச்சர்கள் சென்று அழைப்பு விடுக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கேரளாவுக்கு அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், ஆந்திராவுக்கு எ.வ.வேலு, மேற்கு வங்கத்திற்கு கனிமொழி, ஒடிசா மாநிலத்திற்கு டி.ஆர்.பி.ராஜா செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சர்வதேச மகளிர் தின விழாவில் கவர்னர், முதல்வர் பங்கேற்பு



புதுச்சேரி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கரிக்கலாம்பாக்கம் புஷ்பா திருமண நிலையத்தில் நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் கைலாசநாதன் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த பெண்களுக்கு துணைநிலை ஆளுநர் நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். இதில் முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், வேளாண் மற்றும் மகளிர் - குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜெயக்குமார், செயலர் ஜெயந்த குமார் ரே, இயக்குநர் முத்துமீனா, பல்வேறு சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் விழாவில் பங்கேற்றனர்.

## 2026 சட்டசபை தேர்தல்: நிர்வாகிகளுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை

சென்னை, மார்ச் 9-

தமிழகத்திற்கு வரும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. சட்டசபை தேர்தலுக்கான ஆயத்த பணிகளை அரசியல் கட்சிகள் இப்போதே தொடங்கி விட்டன. இந்நிலையில் அ.தி.மு.க. மாவட்ட, ஒன்றிய, நிர்வாகிகளுடன் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார். அ.தி.மு.க. அமைப்புரீதியாக உள்ள 82 மாவட்ட நிர்வாகிகளுடன் அவர் காணொலி காட்சி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். ஆலோசனையின்போது, சட்டசபை தேர்தல் பணிகளை தற்போதே தொடங்க அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு அவர் வலியுறுத்தினார். மேலும் பூத் கமிட்டி அமைப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். கட்சியில் ஆங்காங்கே இருக்கும் பூசல்களை களைய வேண்டும் என்றும் நிர்வாகிகளுக்கு அவர் அறிவுரை வழங்கினார்.

## பணிகள் முடிந்து தயார் நிலை: பாம்பன் புதிய ரெயில் பாலம் திறப்பு விழா எப்போது?

ராமேசுவரம், மார்ச் 9-

பாம்பன் கடலில் தற்போதுள்ள ரெயில் பாலம் 110 ஆண்டுகளை கடந்த பழமையான பாலம் ஆகிவிட்டதால் அந்த பாலத்தின் அருகிலேயே சுமார் 50 மீட்டர் தூரத்தில் வடக்கு கடல் பகுதியில் ரூ.545 கோடியில் புதிதாக ரெயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தின் மையப்பகுதியில் சுமார் 75 மீட்டர் நீளமும், 650 டன் எடையும் கொண்ட செங்குத்து வடிவிலான தூக்குப்பாலமும் கட்டப்பட்டுள்ளது.

பாம்பன் கடலில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய ரெயில் பாலம் திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது. பிரதமர் நரேந்திர மோடியால் புதிய ரெயில் பாலம் திறந்து வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதால் அருகிலுள்ள பழைய தூக்குப்பாலத்திலும் உப்பு காற்றால் துருப்பிடிக்காத அலுமினிய பெயிண்ட் அடிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் புதிய ரெயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்க வர உள்ளதால் இதுவரை 3 கட்டமாக ரெயில் மற்றும் கப்பல் இயக்கியும் ஒத்திகை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டு விட்டது. ஆனால் இதுவரை புதிய ரெயில் பாலம் திறப்பு விழா தேதி குறித்து ரெயில்வே துறை மூலம் அதிகாரப்பூர்வமாக எந்த ஒரு அறிவிப்பும் வரவில்லை.

ஜனவரி மாதம் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தற்போது மார்ச் மாதம் பிறந்துள்ள நிலையில் இதுவரையிலும் புதிய ரெயில் பால திறப்பு விழா தேதி அறிவிக்கப்படாத நிலையே இருந்து வருவதால் சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் மிகுந்த ஏமாற்றத்தில் உள்ளனர். எனவே பாம்பன் புதிய ரெயில் பாலத்தை விரைவில் திறந்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே அனைத்து சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

## மீனவர்களை திரட்டி த.வெ.க. போராட்டம்: விஜய் பங்கேற்பதாக தகவல்

சென்னை, மார்ச் 9-

மீனவர்கள் பிரச்சனைக்கு தீர்வு காணவும், இலங்கை கடற்படையினரை கண்டித்தும் த.வெ.க. சார்பில் கடலூரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது. தமிழக வெற்றிக் கழகம் மீனவர்களை திரட்டி போராட்டம் நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆர்ப்பாட்டம் நடத்த முறையாக போலீஸ் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், போராட்டத்தில் விஜய் பங்கேற்க உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

மிகப்பெரிய அளவில் மீனவர்களை திரட்டி கட்சி சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தை அடுத்த வாரத்தில் நடத்த த.வெ.க. திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

## கடலூர் பெட்ரோலிய வணிகர் சங்க தலைவர் இல்ல திருமண விழா



### தாமக தலைவர் ஜிகே வாசன் பங்கேற்பு

கடலூர், மார்ச் 9-

கடலூர் மாவட்ட பெட்ரோலிய வணிகர் சங்க தலைவர் ராமலிங்கம் பண்ருட்டி, நெய்வேலி ஓம்சக்தி பெட்ரோலிய நிறுவனங்கள் கோவிந்தராஜி ஆகியோரின் இல்ல திருமண விழா கடலூரில் நடந்தது. இந்த விழாவுக்கு தாமக தலைவர் தலைவர் ஜி.கே. வாசன் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினார். அவருடன் தமிழ்நாடு பெட்ரோலியம் டீலர் அசோசியேஷன் மற்றும் கடலூர் மாவட்ட பெட்ரோலியம் டீலர்ஸ் அசோசியேஷன் நிர்வாகிகள் மற்றும் வணிகர்கள், அரசியல் கட்சியினர், தொழிலதிபர்கள், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு மாரத்தான் போட்டி




**கோவை, மார்ச் 9-**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் கோவை சரவணம்பட்டி பகுதியில் அக்னி சிறகே 2025 எனும் தலைப்பில் 1000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்ற மாரத்தான் போட்டி நடைபெற்றது. இதில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழக வெற்றி கழகம் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பரிசுகள் வழங்கினார். மேலும் த.வெ.க. மகளிர் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சால்வை அணிவித்து கௌரிவித்தார். இதனைத் தொடர்ந்து பேசிய புஸ்ஸி ஆனந்த், மராத்தான் ஓட்டத்தில் பங்கேற்ற அனைத்து மகளிருக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள். விலையில்லா விருந்தகம் 997 நாட்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. தினம் தோறும் 150 பேருக்கு தமிழக வெற்றி கழகம் சார்பில் காலை உணவு வழங்கி வருகிறது. கோவையில் இதை செய்து கொண்டு இருக்கும் மாநகர் மாவட்டச் செயலாளர் சம்பத்திற்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். தமிழக வெற்றிக் கழக கோவை மாநகர செயலாளர் சம்பத் முன்னெடுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அக்னி சிறகே 2025 மாரத்தான் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பெண்களுக்கும், தமிழக வெற்றிக் கழகத்தினருக்கும் மனதார வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்று பேசினார். அதனைத்தொடர்ந்து சிலம்பம், கராத்தே, நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சீனியர் அத்லெட் பவானி காசிநாத், கேடிஎம்ஏஏ ஒருங்கிணைப்பாளர் ஜெயலட்சுமி, கோவை பாண்டியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு போட்டிகளை துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாநகர் மாவட்ட நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மகளிர் அணியினர், பெண்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சக்குடி ஊராட்சியில் ஜல்லிக்கட்டு போட்டி



**மதுரை, மார்ச் 9-**

மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் சக்குடி ஊராட்சியில் ஸ்ரீமுப்புலிசுவாமி கோவில் உற்சவ விழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு தமிழ்நாடு ஜல்லிகட்டு பேரவை தலைவர் பி.ராஜசேகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வணிகவரி துறை அமைச்சர் மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா வருவாய் கோட்டாட்சியர், கிழக்கு வட்டாட்சியர் கால்நடை துறை இணை இயக்குநர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து ஏராளமான காளைகள் அவிழ்த்து விடபட்டன. பரிசுகள் எதுவும் இல்லாமல் லாப நோக்கமில்லாமல் நடைபெற்ற இந்த ஜல்லிக்கட்டில் மாடுபிடி வீரர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு விளையாடினர். போட்டியில் கலந்துகொண்ட மாட்டின் உரிமையாளர்களுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் வேஷ்டி துண்டுகள் வழங்கப்பட்டன. ஜல்லிக்கட்டையொட்டி காவல் துறை சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் சுகாதார துறை சார்பில் மருத்துவ முதலுதவிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

# மகளிர் தினத்தையொட்டி தவெக ரூ.5 லட்சம் நலத்திட்ட உதவி



**விழுப்புரம், மார்ச் 9-**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஏற்பாட்டில் விழுப்புரம் தென்மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல் தலைமையில் இணைச் செயலாளர் ரமேஷ் (எ) சக்திவேல் பொருளாளர் விஜய் தீப் காமராஜர் கார்த்திக் முன்னிலையில் நேமூரில் உலகமகளிர் தினத்தையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தந்த கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட செயலாளர் பரணி பாலாஜி வழக்கறிஞர் கலந்துகொண்டு பெண்கள் பாதுகாப்பு பெண்கள் விழிப்புணர்வு போன்ற கலைநிகழ்ச்சிகளை பார்வையிட்டார். பின்னர் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் சார்பில் ரூ.5 லட்சம் மதிப்புள்ள மகளிர்களுக்கான நலத்திட்ட உதவி 1000 புடவைகள் தையல் மிஷின்கள், மாற்றுத்திறனாளிக்கு சைக்கிள், பெண்களுக்கு ஹெல்மெட், சாலையோரம் வசிக்கும் வியாபாரிகளுக்கு குடை இஸ்திரி பெட்டி, அன்னதானம் வழங்கினார். இதில் 2000க்கும் மேற்பட்ட பெண்கள் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பான வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் மணிராஜன், இணை செயலாளர் தனஞ் ஜெயன், பொருளாளர் மதியழகன், மாவட்ட நிர்வாகிகள் பிரித்திவிராஜ், சுனிதா, சுதாகர், இளவரசன், தமிழரசன், ஒன்றிய நிர்வாகிகள் பிரகாஷ், பிரியா, துர்கா, சிவகுமார், விஜயன், சரவணன், ராஜேஷ், ஜீவா, மணிகண்டன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நறுவீ மருத்துவமனையில் மகளிர் தின விழா




வேலூர் நறுவீ மருத்துவமனையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். உடன் மருத்துவமனை தலைவர் முனைவர் சம்பத், துணைத் தலைவர் அனிதா சம்பத், செயல் இயக்குநர் பால் ஹென்றி, மருத்துவ சேவைகள் தலைவர் அரவிந்தன் நாயர், மருத்துவ கண்காணிப்பாளர் ஜேக்கப் ஜோஸ் ஆகியோர் இருந்தனர்.

# அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், ஜாப்ராபேட்டையில் நடைபெற்ற உலக மகளிர் தினவிழாவில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# தமிழக அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், கரிசல்களாம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் நடந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.

# மகளிர் கூட்டமைப்புக்கு மணிமேகலை விருது



திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஊராட்சி அளவில் சிறப்பாக செயல்பட்ட மகளிர் கூட்டமைப்புக்கு மணிமேகலை விருது வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ்.

# ஸ்ரீரங்க பூபதி கல்லூரியில் உலக மகளிர் தின விழா



**செஞ்சி, மார்ச் 9–**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டி செயல்பட்டு வரும் ஸ்ரீ ரங்க பூபதி கல்லூரி சார்பில் உலக மகளிர் தின விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் ரங்க பூபதி தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் ஸ்ரீபதி, கல்லூரி இயக்குனர் சாந்தி பூபதி, சரண்யா ஸ்ரீபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவிகள் ஒன்றிணைந்து மகளிர்களுக்கு மதிப்பளிப்போம், மரியாதை கொடுப்போம், கொண்டாட வேண்டும் என்று உணர்த்தும் வகையில் வாசகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி கேக் வெட்டி கொண்டாடினர். நிகழ்ச்சியில் நர்சிங் கல்லூரி முதல்வர் ஜெயலட்சுமி, துறை பேராசிரியர் இலக்கியா வினுஸ்ரீ மற்றும் கல்வியியல் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# த.வெ.க சார்பில் மகளிர் தின கருத்தரங்கம்



**செஞ்சி, மார்ச் 9–**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த அப்பம்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் தமிழக வெற்றி கழகம் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் பாண்டியன் தலைமையில் மகளிர் தின கருத்தரங்கு கூட்டம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வெற்றிக்கழகத்தின் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் செஞ்சி குணசரவணன் கலந்துகொண்டு மகளிருக்கு புடவைகள், டிபன் பாக்ஸ் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் 500க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கி த.வெ. கழகத்தின் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

# ஹோலி பண்டிகையை கலிபோர்னியா பாதாம் உடன் ஆரோக்கியத்துடன் கொண்டாடுங்கள்



**கோவை, மார்ச் 9–**

வண்ணங்களின் பண்டிகையான ஹோலி, மகிழ்ச்சி, ஒற்றுமை மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் ஒரு பண்டிகையாகும். வசந்த காலத்தின் வருகையையும் தீமையை நன்மை வென்றதையும் குறிக்கும் வகையில் கொண்டாடப்படும். இது, இந்தியா முழுவதும் இசை, சிரிப்பு, மகிழ்ச்சி மற்றும் சுவையான விருந்துகளுடன் கொண்டாடப்படுகிறது. குஜியாக்கள், மால்புவாக்கள் போன்ற இனிப்புகள் முதல் சுவையான தண்டாய் குளிர் பானம் மற்றும் காரமான சிற்றுண்டிகள் வரை, கொண்டாட்டங்களில் உணவு முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பினும், அனைத்து உற்சாகங்களுக்கு மத்தியிலும், நாம் என்ன சாப்பிடுகிறோம் என்பதில் கவனமாக இருப்பது மிகவும் முக்கியம் ஆகும். ஹோலி பண்டிகையில் பருப்புகளின் ராஜாவான கலிபோர்னியா பாதாமை நீங்கள் தயாரிக்கும் உணவுகளுடன் சேர்க்கும்போது அது, மகிழ்ச்சிக்கும் ஊட்டச்சத்துக்கும் இடையில் சரியான சமநிலையை வழங்கும். இந்தியாவின் மிகவும் பிரபலமான கலிபோர்னியா பாதாமில் புரதம், ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் நார்ச்சத்து உள்ளிட்ட 15 அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் உள்ளது. பாதாம் பசியைத்தணிக்கும் பண்புகளை கொண்டுள்ளது. சிறிது பாதாமை நீங்கள் எடுத்துக் கொள்ளும் போது அது நீண்ட நேரம் உங்களை சுறுசுறுப்பாக வைத்திருக்கிறது. ஆரோக்கிய மற்ற சிற்றுண்டிகளை நீங்கள் சாப்பிடுவதை குறைக்கிறது. அவற்றின் இயற்கையான ஆற்றலை அதிகரிக்கும் குணங்கள் உங்களை சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் வைத்திருக்க உதவுகின்றன. பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட இது அவசியம். கலிபோர்னியா பாதாமில் பல்துறை நன்மைகள் உள்ளன. ஹோலி உணவுகளில் கூடுதல் மொறு மொறுப்புக்காக இதைப் பயன்படுத்தினாலும் சரி அல்லது தனியாக சாப்பிட்டாலும் சரி, அவை பண்டிகை மகிழ்ச்சியை சுவையாகவும் ஆரோக்கியமாகவும் ஆக்குகின்றன. இந்த ஹோலி, வண்ணங்கள், மகிழ்ச்சி மற்றும் பாதாமுடன் கொண்டாடப்பட வேண்டும். அப்போது தான் பண்டிகையை ஆரோக்கியமாக மகிழ்ச்சியுடன் கொண்டாடலாம்.

இதுகுறித்து ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய ஆலோசகர் ஷீலா கிருஷ்ணசாமி கூறுகையில், இந்த ஹோலியில், வழக்கமான இனிப்புகள் மற்றும் தின்பண்டங்களுக்கு மாற்றாக உடலுக்கு ஆரோக்கியம் தரும் பாதாமை உங்கள் நண்பர்களுக்கும் உறவினவர்களுக்கும் பரிசாக கொடுங்கள். இதில் புரதம், நார்ச்சத்து மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் உள்ளிட்ட 15 அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் உள்ளது. மேலும் அவை கொழுப்பு அளவை பராமரிக்கவும், இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பாதாமை பரிசளிப்பதன் மூலம், நீங்கள் பண்டிகையை மட்டும் கொண்டாடவில்லை உங்கள் அன்புக்குரியவர்களுடன் ஆரோக்கியத்தின் நன்மையைப்பகிர்ந்து கொள்கிறீர்கள். ஹோலியை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமானதாகவும் ஆக்குகிறீர்கள் என்று தெரிவித்தார்.

# சமுதாய வளைகாப்பு விழா



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கடலூர், தனியார் திருமண மண்டபத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைசெல்வன்.

# தூய்மை பணியாளர்களுக்கு சலுகைகள் குறித்து ஆய்வுக்கூட்டம்




தேசிய தூய்மை பணியாளர் ஆணையத்தலைவர் வெங்கடேசன் தலைமையில் வேலூர் மாவட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்கு பணி வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதர சலுகைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அருகில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி.

# சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன்



தூத்துக்குடி மாவட்டம் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் ஆட்சித்தலைவர் இளம்பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா ஆகியோர் தூத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த 1206 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.104.167 கோடி மதிப்பிலான வங்கி கடன்களை வழங்கினார்.

# மகளிர் தின போட்டி பரிசளிப்பு விழா



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மகளிருக்கு நேதாஜி விளையாட்டு மைதானத்தில் பரிசுகளை வழங்கி பாராட்டினார். அருகில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• ஞாயிறு • மார்ச் 9, 2025

## புதுக்கோட்டையில் மகளிர் தின விழா




புதுக்கோட்டை மாநகராட்சி பாவை பவுண்டேஷன் நடத்தும் உலக மகளிர் தின விழாவில் மேயர் திலகவதி செந்தில் கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களை வாழ்த்தி சிறப்பித்தார். இந்நிகழ்வில் பாவை பவுண்டேஷன் நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## ஜோஸ் ஆலுக்காஸில் உலக மகளிர் தின விழா



புதுச்சேரி, மார்ச் 9-

புதுச்சேரி ஜோஸ் ஆலுக்காஸில் சர்வதேச உலக மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஜிப்மர் மூத்த செவிலியர் அதிகாரி வின்சி, ஆசிரியர் பாக்கியலட்சுமி, வங்கி மேலாளர் சுஜாதா, செவிலியர் அதிகாரி விஜயலட்சுமி, ஜிப்மர் செவிலியர் அதிகாரி சியாமளா, போட் ஹவுஸ் இன்சார்ஜ் சபரி சிவா, அசிஸ்டன்ட் புரோகிராமர் சுபாஷினி, ஆடிட்டர் சாய் சந்திரா, யுவா கேக்ஸ் யுவஸ்ரீ ஆகியோர் பங்கேற்றனர். இவ்விழாவில் ஜோஸ் ஆலுக்காஸ் கிளை மேலாளர் நிஜோ, துணை மேலாளர் மனோஜ், கணக்கு மேலாளர் சஜிஸ் மற்றும் ஜோஸ் ஆலுக்காஸ் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## கோவில் திருவிழாவில் நீர்மோர் வழங்கல்



புதுக்கோட்டை திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு மாநகராட்சி சார்பாக அதன் பணியாளர்களால் நீர்மோர் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை சார்பில் சர்வதேச மகளிர் தின விழா



புதுச்சேரி, மார்ச் 9-

விநாயகா மிஷன் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள விநாயகா மிஷன்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது.

விநாயகா மிஷன் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள விநாயகா மிஷன்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் எஸ் கணேசன் அறிவுறுத்தலின்படி, அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிகளின் டீன் பேராசிரியர் டாக்டர். செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி புதுச்சேரி பிரிவு இயக்குனர் பேராசிரியர் ஆண்ட்ரூ ஜான் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக டாக்டர். அட்சுதன், தலைமை மற்றும் உதவி பேராசிரியர் யோகா அறிவியல் துறை, ஷிஸிநிஷி, விநாயகா மிஷன் புதுச்சேரி வளாகம், பங்கேற்று மகளிர் உடல் ஆரோக்கியத்தில் யோகாவின் பங்களிப்பு பற்றி எடுத்துரைத்தார். அறுபடைவீடு மருத்துவக் கல்லூரியின் உணவியல் நிபுணர் ரீட்டா மேரி பங்கேற்று மகளிர் அன்றாட வாழ்வில் உட்கொள்ள வேண்டிய உணவுப் பழக்கங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்கள் மற்றும் கல்லூரியில் பணிபுரியும் மகளிருக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியை சார்ந்த அனைவரும் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நிர்வாக அதிகாரி சந்துரு மற்றும் கல்லூரியை சார்ந்த அனைத்து ஆசிரியர்களும் செய்திருந்தனர்.

## விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மகளிர் தின விழா




விழுப்புரம், மார்ச் 9-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கலாம் விதைகளின் விருட்சம் சமூக இயக்கம் நடத்திய மகளிர் தின விழா புதுவைத் தமிழ்ச்சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து தலைமையில் நடைபெற்றது. விழாவில் விருதுகள் வழங்கப் பட்டது.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்மையைப் போற்றி வணங்கும் முப்பெரும் விழா கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் சிறந்த கல்லூரிக்கான விருது, சாதனைப் பெண்மணி விருது, மாணவிகளுக்கு பரிசளிப்பு என்று முத்தான மூன்று தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. கலாம் விதைகளின் விருட்சம் சமூக இயக்கத்தின் நிறுவனர் கவிமணி ராஜா விழாவிற்கான ஏற்பாடு, ஒருங்கிணைப்பு மற்றும் நோக்கவுரை ஆற்றினார்.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் மாணவியர் புல முதன்மையர் பேராசிரியர் ராஜேஸ்வரி வரவேற்புரை ஆற்றினார்.

முதல் துளிர் சொசைட்டி தலைவர் எஸ்.வாசுகி ஸ்ரீராமமூர்த்தி, இயற்கை ஆர்வலர் அ.ஹேமலதா, ஜவஹர் துரோணா உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை சௌந்தரி, தேங்காய்த்திட்டு அரசு தொடக்கப்பள்ளியின் தொடக்கப்பள்ளி ஆசிரியை விஜயா, தொழில்முனைவோர் மற்றும் சமூக ஆர்வலர் மலர்வாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) முதல்வர் முனைவர் சி.அகிலா வாழ்த்துரை வழங்கினார். கைத்தண்டலம் எழில்சோலை வனத்தின் நிறுவனர் மரம் மாசிலாமணி, மேனாள் இந்திய விமானப்படை மற்றும் புதுச்சேரி முப்படை முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் வீரத்தாய்மார்கள் நல சங்கத்தின் நிறுவனர் சார்ஜண்ட் ந.மோகன் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றார்கள்.

புதுவைப் பல்கலைக்கழகம் மேனாள் புல முதன்மையர் கலைமாமணி முனைவர் இளமதி ஜானகிராமன், அறம் அறக்கட்டளை நிறுவனர், வலங்கைமான் தமிழ்ச் சங்கம் செயலாளர், உலக திருக்குறள் மையம் தலைவர் ஜெய.மனோகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் சிறந்த கல்விக்கான சேவையைப் பாராட்டி தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரிக்கு "கல்விசார் பன்நோக்கு விருது" வழங்கப்பட்டது. எழில் மாசிலாமணி எழில்சோலை வனம் கைத்தண்டலம், வீரத்தாய்.பி. சூடாமணி செயலாளர் வீரத் தாய்மார்கள் பிரிவு, மணிமேகலை சமூகம் டிரஸ்ட் ஆகியோர் சாதனைப் பெண்மணி விருதுகளைப் பெற்றனர். மகளிர் தினத்தை முன்னிட்டு கல்லூரியில் "இந்தியத் திருநாட்டின் எதிர்கால சாதனைப் பெண்கள்" என்னும் தலைப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது. தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் க.ரேகா நிகழ்ச்சியை நெறியாள்கை செய்தார். பூகரம் டிசைனர் – பொத்திக் நிறுவனர் இர.பரமேஸ்வரி இவ்விழாவில் நன்றியுரை ஆற்றினார்.

## பெண்களின் சிறப்பான பொருளாதார வளர்ச்சியினால் மாநில பொருளாதாரம் வளர்ச்சி பெறும்

### முதலமைச்சர் ரங்கசாமி நம்பிக்கை

புதுச்சேரி, மார்ச் 9-

பெண்கள் நல்ல நிலையில் பொருளாதாரத்தில் முன்னேறினால், மாநில பொருளாதாரமும் சிறப்பான வளர்ச்சியை அடையும் என, முதலமைச்சர் ரங்கசாமி பேசினார்.

புதுவை கரிக்கலாம் பாக்கத்தில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை சார்பில் நடந்த சர்வதேச மகளிர் தின விழாவில் முதலமைச்சர் ரங்கசாமி பேசும்போது கூறியதாவது, தேசிய மகளிர் தினம் என்பது மகளிருக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு நன்னாள் ஆகும். எல்லா பெண் குழந்தைகளும் சிறப்பாக படிக்க வேண்டும்.

புதுவையில் நான் கல்வி அமைச்சராக இருந்தபோது 6, 7வது படிக்கும்போதே பெண்கள் படிப்பை நிறுத்தி விடுவார்கள். ஆனால், தற்போது பெண்கள் கல்வி இடைநிற்றல் இல்லை. கல்லூரிகளுக்கு செல்வதிலும், அதிகம் பட்டம் பெறுவதிலும் பெண்கள்தான் அதிகமாக உள்ளனர்.

அரசு பணியில் சேரும் பெண்களும் அதிகமாக உள்ளனர். புதுவை அரசு தேர்வுகளில் 75 சதவீதம் பெண்கள் தேர்ச்சி பெறுகின்றனர். இந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம்.

பெண்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும்.



யாருக்கும் அடிபணிந்து இருக்கக்கூடாது என்பதற்காக அரசு பல திட்டங்களை கொண்டுவந்துள்ளது. இதனால்தான் பெண்கள் பெயரில் சொத்துக்கள் பதிந்தால் 50 சதவீத பத்திரப்பதிவு கட்டணத்தில் சலுகை வழங்கப்பட்டது.

இதனால்தான் புதுவையில் அதிக சொத்துக்கள் பெண்கள் பெயரில்தான் வாங்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு கல்வி நிதியுதவி, ஊட்டச்சத்து உதவி, இலவச சிலிண்டர், பெண் குழந்தைகளுக்கு ரூ.50 ஆயிரம் வைப்புத்தொகை என பல திட்டங்களை பெண்களுக்காக செயல்படுத்தி வருகிறது.

பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும். பெண்களால் மாநில பொருளா தாரம் உயர வேண்டும். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். கபதொழில் தொடங்க முன்வர வேண்டும். இதற்கு நிதியுதவி அளிக்க வேண்டும். வங்கி கடன் அளிக்க வேண்டும் என்பது அரசின் எண்ணம்.

பெண்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். விழிப்புணர்வு திட்டங்கள், சட்ட திருத்தங்களை கொண்டுவர மேண்டும் என பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு முனைப்புடன் உள்ளது. புதுவையில் பெண்களுக்கான பாலியல் துன்புறுத்தல்கள் மீதான தண்டனை பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக புகார் பெட்டிகள் வைக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நிதியுதவியும் வழங்கப்பட்டு வருகிறது. புதுவை அரசு மக்களுக்காக பல நலத்திட்டங்களை கொண்டு வந்துள்ளது. எந்தவொரு அரசும் செய்யமுடியாத பல நலத்திட்டங்களை மத்திய அரசு துணையோடு புதுவை அரசு செயல்படுத்தி வருகிறது. பெண்களுக்கான திட்டங்கள், நிதியுதவி சரியான முறையில் அரசு செய்து வருகிறது. பெண்களுக்கு அந்தஸ்து. சம உரிமை, சம அதிகாரம் கிடைக்க வேண்டும். அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்பதே அரசின் எண்ணம்.

பெண்களின் பங்கு நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம். அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தொடர்ந்து செய்யும். இவ்வாறு முதலமைச்சர் பேசினார்.

# பெண்கள் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி






சேலம், மார்ச் 9–

நல்லாயன் அருட்சகோதரிகள் இல்ல வளாகத்தில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் கலைநிகழ்ச்சிகள் வாயிலாக பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கார்த்திகா, மாவட்ட சமூக நலத்துறை அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் இந்திரஜித், பெண்களுக்கான இலவச உதவி எண் 181 மாவட்ட அதிகாரி கோகிலா, தொன் போஸ்கோ அன்பு இல்லம் இயக்குனர் அருட்தந்தை காஷ்மீர் ராஜ், அருட் சகோதரி ராஜகுமாரி மற்றும் ஆரோக்கியமேரி, நல்லாயன் அருட்சகோதரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து பெண்கள் தினத்தையொட்டி சிறப்புரை ஆற்றினார்கள். அயோத்தியாபட்டணம் ஒன்றியத்தில் 20 கிராமங்களில் இருந்து சுமார் 250க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் கலந்துகொண்டு விழிப்புணர்வு அடைந்தனர். அரசு அதிகாரிகள் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றத்தை பற்றியும், அதை எவ்வாறு கையாளுவது ,அதில் அவர்களுடைய பங்கு என்ன மற்றும் அரசு நலத்திட்டங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தனர். மேலும் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் குழுக்களாக

இணைந்து பல்வேறு தலைப்புகளின் கீழ் கலை நிகழ்ச்சிகள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நிகழ்வில் சிறப்பு அம்சமாக பெண் குழந்தைகள் பிறப்பு முதல் இறப்பு வரை எவ்வாறு பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள் என்று குரு நாடகம் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# ஈரோடு மருத்துவமனையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஆலோசனைக் கூட்டம்



ஈரோடு, மார்ச் 9–

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூ.34.00 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இதில் அறுவை சிகிச்சை அரங்குகள், எக்ஸ்ரே, சி.டி ஸ்கேன், பிரசவ அறை, தாய்ப்பால் வங்கி, தீவிர சிகிச்சை பிரிவு, குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு, அவசர அறுவை அரங்கு, தாய்மார்கள் பாலூட்டும் அறை, ஆய்வகம், பணி மருத்துவர்கள் அறை, பொதுமக்கள் காத்திருப்பு அறை, அவசர சிகிச்சை பிரிவு, செயற்கை சுவாச கருவி அறை, அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பிரிவு, கழிவறை, உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுடன் இரண்டு தளங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான மருத்துவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கான நோயாளிகள் நலச் சங்கம் அமைப்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தேவையான தார் சாலை வசதி, மின் விளக்கு வசதி போன்றவற்றை தன்னார்வலர்கள் திட்டம் மூலம் செயல்படுத்திக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கல்லூரியின் முதல்வர் டி.ரவிக்குமார், துணை முதல்வர் ஆர்.டி.புவிதா, மருத்துவ கண்காணிப்பாளர் (பொ) செந்தில் செங்கோடன், உறைவிட மருத்துவ அலுவலர் பி.டி. ராணி மற்றும் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பெண் காவலர்கள் பங்கேற்ற மாரத்தான் போட்டி



கடலூர் சில்வர் பீச்சில் உலக மகளிர் தினத்தில் பெண் காவலர்கள் பங்கேற்ற மாரத்தான் போட்டியை எஸ்பி ஜெயக்குமார் முன்னிலையில் கமிஷனர் டாக்டர் அனு துவக்கி வைத்தார்.

# உடல் நலம், மனநலம் விழிப்புணர்வு கருத்தரங்கு



சேலம், மார்ச் 9–

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மாணவிகளுக்கான உடல் நலம், மனநலம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் சேலம் 8 அரசு மகளிர் கலை கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது. இன்றையதினம் மாவட்ட மனநல அலுவலகம் சார்பில் மாணவிகளுக்கான உடல்நலம், மனநலம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறுகிறது. குறிப்பாக, தமிழ்நாடு அரசின் சார்பில் மகளிரின் நலனை மேம்படுத்தும் வகையில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், இல்லத்தரசிகளுக்கான கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற அரசின் திட்டங்களை மகளிர் உரிய முறையில் தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

திரைப்படம் பார்ப்பது, சமூக ஊடகங்களை பயன்படுத்துவது போன்றவை படிப்போடு தொடர்புடையது அல்ல. எனவே, அதில் அதிக நேரம் செலவிடாமல் படிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மாணவ, மாணவிகள் கல்வி கற்கும் காலத்தில் சமூக ஊடகங்களில் ஏற்படும் கவனச் சிதறல்களைத் தவிர்த்து முன்னேற்றப்பாதையில் பயணிக்க வேண்டும். மாணவ, மாணவிகளாகிய நீங்கள் இன்றைய நவீன கால முன்னேற்றத்திற்கு ஏற்ப புதிய விஷயங்களை தொடர்ந்து கற்றுவர வேண்டும். இதனால் நம் வாழ்வில் எவ்வித அச்சமும் இன்றி தன்னம்பிக்கையுடன் வாழ்வை அணுக வாய்ப்பாக அமையும். நமது உடல்நலம் நன்றாக பராமரிக்கப்படும் சூழ்நிலையில் மட்டுமே மனநலம் சிறப்பாக அமையும் என்பதையும், இதனால் சமூக நலன் சிறந்த மேம்பாடு அடைய வாய்ப்பாக அமைகிறது என்பதையும் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அந்தவகையில், மகளிராகிய நமது உடல்நலத்திற்கும், மனநலத்திற்கும் அனைவரும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு மகளிர் தினத்தை முன்னிட்டு இக்கருப்பொருளை மையமாகக் கொண்டு இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியை இங்கு ஏற்பாடு செய்துள்ளது. தொடர்ந்து நீங்கள் பல்வேறு சாதனைகளை புரிந்திட வேண்டும். இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (சுகாதாரம்) டாக்டர் எஸ்.பி. நந்தினி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, சேலம் 8 அரசு மகளிர் கலை கல்லூரி முதல்வர் (பொ) இரா. ஜெயஸ்ரீ, மாவட்ட மன நல மருத்துவர் டாக்டர் கே. எஸ். விவேகானந்தன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், கல்லூரி ஆசிரியைகள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# திருநங்கைகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், மார்ச் 9–

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் திருநங்கைகளின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் முதல் வாரம் வெள்ளிக்கிழமை திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் முகாம் நடத்தப்படுகிறது. அந்தவகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் 622 திருநங்கைகள் வசிக்கின்றனர். இவர்களில் 549 திருநங்கைகளுக்கு சமூக நலத்துறையால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 179 திருநங்கைகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருவதுடன், 25 திருநங்கைகளுக்கு தலா ரூ.50,000 சுய தொழில் தொடங்குவதற்கான கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்றையதினம் நடைபெற்ற திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் திருநங்கைகளின் குறைகளைக் கேட்டறிந்து, இலவச வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, வங்கிக்கடன்கள், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளைத் தெரிவித்துள்ளனர். இக்கோரிக்கைகளின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மயில், மாவட்ட சமூக நல அலுவலர் ரா.கார்த்திகா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செந்தில்குமார், துணை ஆட்சியர் ஆர், மாருதி பிரியா, தாட்கோ மாவட்ட மேலாளர் ராமதாஸ் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிப்பு




கடலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்கத்தின் சார்பில் கட்சி அங்கிகாரம் பெற்றதற்கான பேரணி மற்றும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. பின்னர் துணை மேயர் தாமரைச்செல்வன் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• ஞாயிறு • மார்ச் 9, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மின் பணியாளர் நலசங்க உறுப்பினர் சேர்க்கை முகாம்

## எதிர்க்கட்சித் தலைவர் சிவா பங்கேற்பு



**புதுச்சேரி, மார்ச் 9–**

புதுச்சேரி மின் பணியாளர் நல சங்க உறுப்பினர் சேர்க்கை முகாம் வில்லியனூரில் உள்ள தனியார் மண்டபத்தில் காலை நடந்தது. சட்ட ஆலோசகர் ராதாகிருஷ்ணன் வரவேற்று பேசினார். சங்க தலைவர் செம்மனேரி தலைமை வகித்தார்.

புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று மின் பணியாளர் சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி, வாழ்த்தி பேசினார்.

தொடர்ந்து அரசு மின் ஒப்பந்ததாரர் சங்க தலைவர் பாலகுரு, பொதுச்செயலாளர் தயாநிதி, ஒருங்கிணைப்பாளர் புருஷோத்தமன், இணைச் செயலாளர் குணசேகரன், துணைத் தலைவர் பாஸ்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில், சங்க செயற்குழு உறுப்பினர்கள் சந்திரசேகர், தீனதயாளன், ஜெயாசங்கர், தேவநாதன், இளங்கோ, அறிவழகன், நாராயணன் மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், தலைமை செயற்குழு உறுப்பினர் சண் குமரவேல், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன் தாசு, வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், சபரிநாதன், ராஜி, மிலிட்டரி முருகன், சேகர், காசிநாதன், காளிதாஸ், முத்து, அருள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# மகளிர் தின விழா கொண்டாட்டம்



கடலூர் பகுதி வில்வ நகரில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாநகராட்சியின் மேயர் சுந்தரி ராஜா, ஆணையாளர் அனு, துணை மேயர் தாமரைச்செல்வன் மற்றும் மாவட்ட செயலாளர் செந்தில் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# விழுப்புரம் புத்தக திருவிழாவில் முன்னாள் தலைமை செயலாளர் பங்கேற்பு





**விழுப்புரம், மார்ச் 9–**

விழுப்புரம் நகராட்சி திடலில் நேற்று ஏழாம் நாளான புத்தகத் திருவிழாவில், முன்னாள் தலைமைச் செயலாளர் (தமிழ்நாடு அரசு) முனைவர் வெ.இறையன்பு (ஓய்வு) "நட்பெனும் நந்தவனம்", முன்னாள் நிகழ்ச்சி இயக்குநர் (அகில இந்திய வானொலி) முனைவர் சுந்தர ஆவுடையப்பன் "பகைவனுக்கு அருள்வாய்" தலைப்பிலான சொற்பொழிவு நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் பங்கேற்றார்.

விழுப்புரம் மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் தென்னிந்த புத்தக பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் புத்தகத் திருவிழா விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள நகராட்சித் திடலில் 02.03.2025 அன்று தொடங்கி 12.03.2025 அன்று வரை 11 நாட்கள் தினமும் காலை 10.00 மணிமுதல் இரவு 9.30 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் சுமார் பல்வேறு தலைப்புகளில் புத்தக அரங்குகள், துறைசார்ந்த அரங்குகள், உள்ளூர் படைப்பாளிகளின் அரங்குகள் தினந்தோறும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடம் அமைக்கப்பட்டுள்ளது. வாசிப்புத்திறனை மேன்மைபடுத்திட பெருந்திரள் வாசிப்பு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள், தகவல் தொடர்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த உரைநிகழ்வுகள், பல்வேறு தனித்திறன் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில், இன்றைய தினம், ஏழாம் நாள் புத்தகத் திருவிழாவில், காலையில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பல்வேறு தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்பட்டது.

தொடர்ந்து, மாலையில் இதழ் கிராமியக் கலைக் குழுவினரின் பறையாட்டம் கலை நிகழ்ச்சியும், உள்ளூர் படைப்பாளிகளின் சொற்பொழிவும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் தலைமைச் செயலாளர் (தமிழ்நாடு அரசு) வெ.இறையன்பு (ஓய்வு) அவர்களின் "நட்பெனும் நத்தவனம்", முன்னாள் நிகழ்ச்சி இயக்குநர் (அகில இந்திய வானொலி) முனைவர் சுந்தர ஆவுடையப்பன் அவர்களின் "பகைவனுக்கு அருள்வாய்" என்ற தலைப்பிலான சொற்பொழிவு நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் பங்கேற்றார்.

மேலும், ஏழாம் நாள் புத்தகத் திருவிழாவில், சுமார் 7000த்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் பங்கேற்று பயன்பெற்றனர்.

எனவே, விழுப்புரம் மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் 11 நாட்கள் நடைபெறும் புத்தகத்திருவிழாவில் பங்கேற்று பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்வில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஏ.விஜயசக்தி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் மு.சந்திரசேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, மாவட்ட நூலக அலுவலர் காசீம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைப்பயணம்



**சேலம், மார்ச் 9–**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் காவல் துறையின் சார்பில் விழிப்புணர்வு நடைப்பயணத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, மாநகர காவல் ஆணையர் பிரவீன்குமார் அபினபு முன்னிலையில் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றைய தினம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் காவல் துறையின் சார்பில் விழிப்புணர்வு நடைப்பயணம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நடைபயணத்தில் கல்லூரி மாணவிகள் காவல் துறை பெண் அலுவலர்கள், சமூக நலத்துறையின் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மைய அலுவலர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட 1,000க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். சுமார் 5 கி.மீ நீளம் கொண்ட இந்நடைபயணமானது மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்திலிருந்து வின்செண்ட், நரசூஸ், இராமகிருஷ்ணா சாலை. 4 ரோடு. அண்ணா பூங்கா வழியாக மீண்டும் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது.

பெண்களின் அவசர கால தேவைக்கு சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்தின் பெண்களுக்கான உதவி எண்181 ன் செயல்பாடுகள் குறித்தும், மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்து மாணவிகளுக்கும், காவல்துறைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க உதவும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள போலீஸ் அக்கா" திட்டம் குறித்தும், பெண்களுக்கு அவசர காலத்தில் காவலன் செயலியின் பயன்பாடுகள் மற்றும் முக்கியத்துவம் குறித்தும் இந்நடைபயணத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் காவல் துணை ஆணையாளர்கள் சிவராமன், வேல்முருகன், கீதா, சேலம் மாநகர ஆயுதப்படை கூடுதல் ஆணையாளர் ரவிச்சந்திரன், காவல் உதவி ஆணையர்கள் வெங்கடேசன், ஹரிசங்கரி, அஸ்வினி, ரமலி, மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், சேலம் மாநகர காவல் துறையைச் சேர்ந்த பெண் காவலர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம்



**திருவண்ணாமலை, மார்ச் 9–**

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் கிரி (செங்கம்), அம்பேத்குமார் (வந்தவாசி), சரவணன் (கலசப்பாக்கம்), ஜோதி (செய்யாறு), மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில் அனைத்து மக்களும் பயனடையும் வகையில் சிறப்பு மிகு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த திட்டங்கள் எல்லாம் கிராமப்புற மக்களுக்கு கிடைக்கும் வகையில் பணியாற்றுவது ஊரக வளர்ச்சி துறையினரின் முக்கிய பணியாகும். மேலும் நமது திருவண்ணாமலை மாவட்டம் 18 ஊராட்சி ஒன்றியங்களில் 860 ஊராட்சிகளை கொண்ட மிகப் பெரிய மாவட்டமாகும். மக்களுக்கு தேவையான அடிப்படை பணிகளை மேற்கொள்ளுவது அரசின் கடமையாகும்.

குறிப்பாக குடிநீர் திட்டப் பணிகள், கிராம சாலைகள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், தெரு மின் விளக்குகள், சுகாதாரப்பணிகள், பெரியார் சமத்துவபுரம் வீடுகள் கட்டும் பணிகள், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 3114 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கட்டப்பட்டு வருவது குறித்தும், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், கிராமப்புறங்களில் உள்ள அரசு பள்ளிகளில் சுகாதார மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை பணிகள் அனைத்தும் முறையாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதை தனி அலுவலர்கள் கண்காணித்து பணியாற்றிட வேண்டும்.

ஊரக வளர்ச்சி துறைச் சார்ந்த பணிகள் மட்டுமின்றி கிராமப்புறங்களில் மேற்கொள்ள வேண்டிய பிற துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டியது அவசியம் ஆகும். ஆகவே அரசின் திட்டங்கள் மற்றும் பணிகள் அனைத்தையும் எவ்வித தொய்வின்றி விரைந்து செயல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

அதனை தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து துறைச் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு, வளர்ச்சி திட்டப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக திருவண்ணாமலை, செங்கம், கலசப்பாக்கம் வட்டாட்சியர்களுக்கு 3 புதிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்து சாவியினை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் யோகேஷ் குமார் கார்க், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, உதவி செயற்பொறியாளர் (சாலைகள் மற்றும் பாலங்கள்) திருவண்ணாமலை கோட்டம் சக்திவேல், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் (பொ) செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) கிருஷ்ணன், திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், மாநகராட்சி ஆணையாளர் காந்திராஜ், உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) வடிவேலன் (திருவண்ணாமலை), வேல்முருகன் (செய்யாறு), உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஆய்வு

திருவண்ணாமலை, மார்ச் 9-

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை மணிவாசன் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் திருவண்ணாமலை கிரிவலப்பாதை மற்றும் அண்ணாமலையார் கோவிலில் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்துவது குறித்து ஆய்வுமேற்கொண்டார்கள்.



திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலுக்கு வெளிநாடுகள், வெளிமாநிலம் மற்றும் பல்வேறு பகுதிகளிலில் இருந்து அதிக அளவில் பக்தர்கள் வருகை புரிகின்றனர்.

அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறை மாவட்ட ஆட்சித்தலைவர் கிரிவலப் பாதையில் திருப்பணிகள் நடைபெறுவது குறித்தும் அண்ணாமலையார் கோவிலில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது கிரிவல பாதையில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் 170 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதி மற்றும் கிரிவல பாதையில் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் ஆண்மீக அருங்காட்சியகம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்வது குறித்தும் ஆய்வு செய்தார்கள்.

தொடர்ந்து அருணாச்சலேஸ்வரர் கோவிலில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் பக்தர்கள் காத்திருப்பு கூடம் மற்றும் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அன்னதான கூடம் அமைப்பது குறித்தும் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் கோவில் கோபுரங்களுக்கு வண்ண விளக்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்வது குறித்தும் திருமண மண்டபம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் காந்திராஜ், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் (பொ) செந்தில்குமார், அருணாச்சலேஸ்வரர்க்கோவில் இணை ஆணையர் ஜோதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழக வெற்றி கழகம் சார்பில் மதுரையில் மகளிர் தின விழா



மதுரை, மார்ச் 9-

தமிழக வெற்றி கழகம் சார்பில் மதுரையில் நடைபெற்ற மகளிர் தின விழா நடந்தது. இதில் பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி என பல்வேறு போட்டிகளில் பங்குபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கிய மாற்றுத்திறனாளி பெண்கள் 2026 இல் ஆட்சி அமைக்கப்போவது தமிழக வெற்றிக் கழகம் தான் என ஆவேசமாக பேசினார்.

சர்வதேச மகளிர் தின விழா உலகம் முழுவதும் என்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வரக்கூடிய வேலையில், தமிழக முதல்வர் சென்னையில் இருந்து பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

இந்த நிலையில் தமிழகம் முழுவதும் தமிழக வெற்றி கழகம் சார்பில் பாலியல் வன்கொடுமைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் காவல்துறையினரிடம் மனு வழங்கும் நிகழ்வு நடைபெற்ற வேளையில்

மதுரை மாவட்ட செயலாளர், (வ) விஜய் அன்பன் கல்லானை தலைமையில் மதுரை அண்ணாநகர் பகுதியில் இருக்கக்கூடிய தனியார் உணவு விடுதியில் மகளிர் தின விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

முன்னதாக தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி குத்துவிளக்கு ஏற்றப்பட்ட பிறகு வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோரின் உருவப்படங்களுக்கு பெண்கள் மலர்த்தூவி மரியாதை செய்த பிறகு இனிதே மகளிர் தின விழா தொடங்கியது.

மதுரையின் மேலூர் ஒத்தக்கடை உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் இருந்தும் ஏராளமான பெண்கள் கிட்டத்தட்ட 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்க மேடையில் பெண்கள் தங்களை மறந்து தங்களுடைய நினைவுகளையும் தமிழக வெற்றிக்கழகத்துடைய தற்போதைய நிலைப்பாடுகளையும் பேசி அசத்தி அனைவருடைய கைதட்டல்களையும் கவனத்தையும் ஈர்த்தனர்.

ஓவியம் என்றால் அது குழந்தையாக இருந்தாலும் என்ன பெரியவராக இருந்தாலும் என்ன என்கின்ற வகையில் மூன்று வயது குழந்தை முதல் குழந்தை பெற்ற பெண் வரை போட்டிகளில் பங்கு பெற்று தங்களுடைய திறமைகளை அசத்தினர். குறிப்பாக தமிழக வெற்றிக்கழகம் என்கின்ற தலைப்பில் ஓய்வு போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த மாவட்ட செயலாளர் பேசுகையில், தமிழுக்கு ஒரு சிலை என்றால் அது மதுரை தான். பாரதமாதா தமிழ்த்தாய் என்று பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய ஒரு நாடாக இருக்கும் தமிழகத்தில் இன்று தமிழக வெற்றிக்கழகம் சார்பில் இந்த மகளிர் தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பொதுவாக எந்த ஒரு விழாவாக இருந்தாலும் ஆட்டம் பாட்டம் என்கின்ற நிலையில் இன்றைய சூழலில் நாம் தள்ளப்பட்டு கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழக வெற்றிக்கழகம் அப்படி கிடையாது. பண்பாடு நாகரிகம் என்பதை எடுத்துக்காட்டும் விதமாக ஒவ்வொரு வீடுகளில் இருக்கும் பெண்கள் தங்களுடைய குழந்தைகள் கணவன் பெற்று வரக்கூடிய பரிசு பாராட்டு உள்ளிட்டவைகளை பார்த்து வியந்த காலம் போய் தற்போது இங்கே நடைபெறக்கூடிய போட்டிகளில் பங்கு பெற்றவர்களுக்கு நாங்கள் வழங்கக்கூடிய பரிசுகளையும், கேடயங்களையும் அவர்கள் வீட்டிற்கு கொண்டு போய் அவர்களுக்கான அங்கீகாரம் கிடைத்தது என்று அவர்கள் சொல்லும்போது கிடைக்கக்கூடிய சந்தோஷத்தை பார்க்கும்போது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இப்தார் நோன்பிலே எங்களது தலைவர் விஜய் கலந்துகொண்டது சமத்துவத்தை எடுத்துக்காட்டு விதமாக அமைந்திருக்கிறது. இன்றைய விழாவில் கூட ஏராளமான இஸ்லாமிய சகோதரிகளும் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி இந்த மகளிர் தின விழாவை தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்றால் நீங்கள் தெரிந்து கொள்ளலாம். தமிழக வெற்றி கழகம் எதை நோக்கிப் போகிறது என்று நிச்சயம் எங்களது தலைவர் காட்டும் வழியில் நாங்கள் பயணிப்போம் என்றார்.

# மகளிர் தின விழாவில் நலத்திட்ட உதவி வழங்கல்



உலக மகளிர் தின விழா கிராமத்தின் ஒளி தொண்டு நிறுவனத்தின் சார்பில் மிக சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு கிராமங்களில் இருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட இளம் கைம்பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய, சமூக பிரச்சினைகளை கையாள்வது மற்றும் பொருளாதார வளர்ச்சியை நாம் எப்படி எதிர்கொள்வது என ஊக்கம் அளித்து பேசினர்.

# பண்ணாரி மாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம்

ஈரோடு, மார்ச் 9-

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி பண்ணாரி மாரியம்மன் கோயில் குண்டம் பெருந்திருவிழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் துறைச் சார்ந்த அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.



பண்ணாரி மாரியம்மன் கோயில், குண்டம் பெருந்திருவிழா 07.04.2025 08.04.2025 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர், குண்டம் திருவிழாவில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து காவல்துறை, தீயணைப்புத்துறை, அரசு போக்குவரத்துக் கழகம், வட்டாரப் போக்குவரத்துத்துறை, பொது சுகாதாரத்துறை, மருத்துவத்துறை, சத்தியமங்கலம் நகராட்சி நிர்வாகம், சத்தி ஊராட்சி ஒன்றியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உணவு பாதுகாப்புத் துறை, மின்சார வாரியம், வனத்துறை, பொதுப்பணித்துறை, தேசிய நெடுஞ்சாலைத்துறை, நெடுஞ் சாலைத்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு, அறிவுரைகள் வழங்கி, தெரிவிக்கையில், பண்ணாரி மாரியம்மன் குண்டம் திருவிழாவினையொட்டி கோயிலில் பக்தர்களுக்கு தேவையான குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்கவும், மேலும் கோயில் வளாகத்தில் தூய்மை பணியாளர்களை நியமித்து தூய்மை பணிகள் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், சத்தி மைசூர் சாலை மற்றும் பவானிசாகர் பண்ணாரி சாலைகளில் செல்லும் வாகனங்கள் போக்குவரத்துக்கு நெரிசலின்றி செல்வதை கண்காணிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தற்காலிக தடுப்பு சுவர்களை அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பக்தர்கள் குண்டம் இறங்கும்போது அதாவது 08.04.2025 அதிகாலை 3 மணியில் இருந்து மாலை 4 மணி வரை குண்டத்துக்கு அருகில் மருத்துவக்குழு ஒன்று தயார் நிலையில் இருக்க வேண்டும். பக்தர்களுக்கு தேவையான கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். தீயணைப்பு துறையின் மூலம் தீத்தடுப்பு வாகனம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பக்தர்களின் வசதிக்காக போக்குவரத்துத்துறையின் மூலம் அதிக அளவில் சிறப்பு பேருந்துகளை இயக்கவும், மின்சாரத்துறையின் மூலம் தடையில்லா மின்சாரத்தை வழங்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினர் சட்டம் ஒழுங்கினை பராமரிக்க வேண்டும். அனைத்து துறையினரும் முன்னேற்பாடு பணிகளை தொய்வின்றி திருவிழாக்காலத்திற்கு முன்னரே செய்து முடித்து, திருவிழா நல்ல முறையில் நடைபெற ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, பண்ணாரி மாரியம்மன் கோயில் குண்டம் பெருந்திருவிழாவினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர், வன அலுவலர் (சத்தியமங்கலம் வட்டம்) குலால் யோகேஷ் விலாஸ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, உதவி காவல் கண்காணிப்பாளர் (பயிற்சி) அரிட்டா ராஜ்புட், மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள்) முருகேசன், துணை ஆணையர், செயல் அலுவலர் மேனகா, சத்தியமங்கலம் வட்டாட்சியர் ஜமுனாராணி உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

# விழிப்புணர்வு மாரத்தான் போட்டி



நெல்லை, மார்ச் 9-

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாவட்ட சமூக நல அலுவலகம் மற்றும் மாநகர காவல் துறையினர் இணைந்து பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் நடைபெற்ற விழிப்புணர்வு மாரத்தான் போட்டியினை மாநகர காவல் ஆணையர் சந்தோஷ் ஹதிமனி, மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இன்று நடைபெற்ற மாரத்தான் போட்டி வ.உ.சி மைதானத்தில் இருந்து தொடங்கி ஏ.ஆர்.லைன் வழியாக ஹைகிரவுன்ட் வந்தடைந்து திரும்ப தூய சவேரியார் கல்லூரி வழியாக பாளையங்கோட்டை வ.உ.சி மைதானம் வந்து நிறைவடைந்தது.

தொடர்ந்து, வ.உ.சி மைதானத்தில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவிடும் வகையில் செயல்படும் மகளிர் உதவி மைய எண் 181ஐ குறிக்கும் வகையில் கல்லூரி மாணவிகள் காட்சிப்படுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாநகர துணை காவல் ஆணையர் விஜயகுமார், துணை ஆட்சியர் (பயிற்சி) ஜெபி, மாநகர காவல் உதவி ஆணையர்கள் நிக்சன், அசோக் குமார், மாவட்ட சமூக நல அலுவலர் தாஜுன்னிசா பேகம், குழந்தை கடத்தல் பிரிவு காவல் ஆய்வாளர் உமா, போக்குவரத்து காவல் ஆய்வாளர் மணிமாறன் மற்றும் சமூக நல அலுவலக பணியாளர்கள் மாநகர பெண் காவலர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

## பள்ளி கல்வி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பள்ளிக் கல்வி அலுவலர்களுக்கான மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

## மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன்



புதுக்கோட்டை மாவட்டம், மாநகராட்சி, கற்பக விநாயகா மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா தலைமையில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்கள்.

### தேத்தாம்பட்டு, ஆதிவராகநல்லூர் பகுதியில்

## விளையாட்டு அரங்கம் அமைக்க இடம் தேர்வு செய்வது குறித்து ஆட்சியர் நேரில் ஆய்வு



**கடலூர், மார்ச் 9-**

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைசெல்வன் முன்னிலையில் காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேத்தாம்பட்டு மற்றும் ஆதிவராகநல்லூர் பகுதியில் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்வது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர், உள்ளூர் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் விளையாட்டுத்திறனை மேம்படுத்திடும் வகையிலும், பல்வேறு பயிற்சிகள் அளித்து தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க செய்திட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில், காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அரசுக்கு சொந்தமான இடத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்திடும் பொருட்டு, ஆதிவராகநல்லூர் பகுதியில் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான இடம் தேர்வு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் அரசுக்கு சொந்தமான வேறு இடம் இருந்தாலும் அதனை பரிசீலனை செய்து, அனைவரும் எளிதில் வந்து செல்லும் வகையில் விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார்.

ஆய்வின்போது சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன்குமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் மகேஷ், ஸ்ரீமுஷ்ணம் வருவாய் வட்டாட்சியர் சேகர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமும்
மாலையில்
மாலை
எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

## புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து சிதம்பரம் அரசு மருத்துவமனையில் ஆட்சியர் ஆய்வு



**கடலூர், மார்ச் 9-**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை எளிய பொதுமக்களுக்கு பொருளாதார வேறுபாடின்றி உயர்தரமான சிகிச்சையினை வழங்கிட வேண்டும் என்பதற்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் ஏராளமான திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.

கடலூர் மாவட்டத்தில் அனைத்து மக்களுக்கும் உயர்தரமான மருத்துவ வசதிகள் மற்றும் அவர்களுக்கு தேவையான சிகிச்சைகள் கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்யும் விதமாக சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அவர்களின் உடல் மற்றும் மனதளவிலான தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையம் செயல்பட்டு வருகிறது.

சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி 1985ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பொதுமக்களின் வசதிக்காக சிதம்பரம் அரசு மருத்துவமனை 1992ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தற்போது இம்மருத்துவமனையில் உள்நோயாளிகளாக தங்கி சிகிச்சை பெறும் வகையில் 1250 படுக்கை வசதிகளுடனும், தினந்தோறும் 1000 புறநோயாளிகள் வந்து செல்லும் வகையிலும், சராசரியாக 750 உள்நோயாளிகள் சிகிச்சை பெறும் வகையிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போது மருத்துவக் கல்லூரியில் 750 மாணவர்களும், பல் மருத்துவக் கல்லூரியில் 500 மாணவர்களும் பயின்று வருகின்றனர். மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் உட்பட 101 மருத்துவர்களும், பல் மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் உட்பட 58 மருத்துவர்களும், 65 மருந்தாளுனர்களும், 301 செவிலியர்களும், 291 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. சிதம்பரம். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், ரூ.18 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள கட்டடங்களை புனரமைத்து புதுப்பித்து கூடுதலான பொதுமக்கள் சிகிச்சைபெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அதனடிப்படையில் சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.17.70 கோடி மதிப்பீட்டில் 38 பணிகளும், அரசு மருத்துவ கல்லூரியில் ரூ.7.19 கோடி மதிப்பீட்டில் 26 பணிகளும், அரசு பல் மருத்துவமனை மற்றும் கல்லூரியில் ரூ.3.24 கோடி மதிப்பீட்டில் 10 பணிகளும், அரசு செவிலியர் கல்லூரியில் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் 10 பணிகளும், தங்கும் விடுதிகளில் ரூ.14.20 கோடி மதிப்பீட்டில் 19 பணிகளும், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகங்களில் ரூ.9.70 கோடி மதிப்பீட்டில் 16 பணிகளும் என மொத்தம் ரூ.55.43 கோடி மதிப்பீட்டில் 119 புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

முன்னதாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் பதிவறை, பொது மருந்தகம், தொற்றாநோய் மருந்தகம், காது மூக்கு தொண்டை பிரிவு, அறுவை சிகிச்சை புறநோயாளிகள் பிரிவு, கழிப்பறை, மனநலப் பிரிவு, தோல் புறநோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளில் மருத்துவமனைக்கு சிகிச்சை பெறவந்த பொதுமக்களிடம் மருத்துவமனையால் வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து கேட்டறியப்பட்டது.

ஆய்வின்போது, சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் திருப்பதி, சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன் குமார், உதவி செயற்பொறியாளர்கள் கவிதா, அருள்ராஜா, உதவிப் பொறியாளர் பாரத்திபன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## காவல் உதவி செயலி குறித்து விழிப்புணர்வு பேரணி






திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் பாதுகாப்பிற்கான காவல் உதவி செயலி குறித்து விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன், மாவட்ட காவல் ஆணையர் ராஜேந்திரன்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# தொகுதி மறுவரையறை ஒரு கட்சி பிரச்னை இல்லை-மு.க.ஸ்டாலின்

# 2026 சட்டசபை தேர்தல்: நிர்வாகிகளுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை





# மீனவர்களை திரட்டி போராட்டம்-த.வெ.க.


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 9-3-2025 ஞாயிற்றுக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்